1972 ஆகஸ்ட் 19]

மக்கள் நெருக்கடி காரணமா என்பதை அறிய ஆராய்ச்சியை சென்னை நகரத்தில் அரசு நடத்தியதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

குடும்பநலத் திட்டம்.

* 189 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குடும்பநலத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய தனிப்பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தக் குடும்ப நல திட்டத்தின் கீழ் பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு பயன்படுத்தப்படுகிற டாக்டர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருக்கிற காரணத்தினால் சில பல நேரங்களில் சங்கடங்கள் உருவாவதாகச் சொல்லப்படுகிறது. ஆக, பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்கிற நேரத்தில் பெண் டாக்டர்களையே பயன்படுத்துவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இது தவறான கருத்து. ஏனென்றால் இந்த திட்டத்தில் பெண்களுக்கு போஸ்ட் டெலிவரி ஆபரேஷன் என்ற நிலையில் பெண் டாக்டர்களால் மட்டும் தான் நடத்தப்படுகிறது. இது பிரசவத்தையொட்டி நடத்தப்படுவதால் கைனகாலஜி, ஆப்ஸ்டடெரிக்ஸ் போன்ற துறைகளில் தகுதி பெற்று சிறப்பு பட்டம் பெற்ற பெண்கள் மட்டும் தான் இந்தத் துறை டாக்டர்களாக நியமிக்கப்படுகிறார்கள். ஏராளமான பெண்கள், தகுதியுள்ளவர்கள், தகுந்த மேற்பார்வையில் இந்த அறுவை சிகிச்சையை நடத்துகிறார்கள். உடன் இருந்து செய்கிறவர்கள், மற்றும் பெரும்பாலோர் பெண்களாகவே தான் இருப்பார்கள்.